# TAMIL NADU POLLUTION CONTROL BOARD

**Press Release**

As per the orders of the Hon'ble National Green Tribunal (Principal Bench), New Delhi dated 16.09.2020 in O.A.No. 681 of 2017, the Central Pollution Control Board (CPCB) have issued *'Environmental Guidelines for Poultry Farms'* during August 2021. Again as per the orders of the Hon'ble National Green Tribunal (Principal Bench) dated 10.12.2021 in O.A. No. 320 of 2021, the CPCB have issued a revised *'Environmental Guidelines for Poultry Farms'* during January 2022. These guidelines are applicable to all the category of poultry farms.

Further as per the said guidelines, the Poultry Farms are categorized under 'Green Category' and ....

- Poultry Farms having birds above 25,000 at single location will have to obtain consent to establish (CTE) and consent to operate (CTO) under the Water (Prevention and Control of Pollution) Act, 1974 and the Air (Prevention and Control of Pollution) Act, 1981, from State Pollution Control Board (SPCB) with effect from August 2021.
- Poultry Farms having birds above 5,000 and less than or equal to 25,000 at single location will have to obtain CTE and CTO from SPCB with effect from 01.01.2023.

In view of the above, the Poultry Farms in Tamil Nadu State are requested to comply with the *'Environmental Guidelines for Poultry Farms'* issued by CPCB in January 2022 and get CTE and CTO from the Tamil Nadu Pollution Control Board as per the time schedule given above. For further details contact the District Environmental Engineer and also visit TNPCB official website: www.tnpcb.gov.in

10/6/2022

**Tamil Nadu Pollution Control Board.**

No. 76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 044-22353134 - 139 Fax : 044-22353068
Email : tnpcb-chn@gov.in Web : tnpcb.gov.in

# TAMIL NADU POLLUTION CONTROL BOARD

## செய்தி வெளியீடு

புது டெல்லியில் உள்ள மாண்புமிகு தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு வழக்கு எண். 681/2017–ல் 16.09.2020 அன்று வழங்கிய உத்தரவின் படி, மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த ஆகஸ்ட் 2021–ல் 'கோழிப் பண்ணைகளுக்கான சுற்றுச்சூழல் வழிகாட்டுதல்களை' வெளியிட்டது. மீண்டும் தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தின் முதன்மை அமர்வு வழக்கு எண். 320/2021–ல் 10.12.2021 அன்று வழங்கிய உத்தரவின் படி மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் ஜனவரி 2022–ல் திருத்தப்பட்ட 'கோழிப் பண்ணைகளுக்கான சுற்றுச்சூழல் வழிகாட்டுதல்களை' வெளியிட்டுள்ளது. இவ் வழிகாட்டுதல்கள் அனைத்து வகையான கோழிப்பண்ணைகளுக்கும் பொருந்தும்.

இதன் படி ஒரே இடத்தில் 25000 பறவைகளுக்கு மேல் வளர்க்கும் கோழிப்பண்ணைகள் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981–ன் கீழ் மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் இருந்து ஆகஸ்ட் 2021 முதல் கோழிப் பண்ணை நிறுவுவதற்கான இசைவாணை (Consent to Establish) மற்றும் கோழிப் பண்ணை செயல்படுவதற்கான இசைவாணை (Consent to Operate) பெற வேண்டும்.

ஒரே இடத்தில் 5000 முதல் 25000–க்கு குறைவான அல்லது அதற்கு சமமான பறவைகள் வளர்க்கும் கோழிப்பண்ணைகள் வருகிற 01.01.2023–லிருந்து மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் இருந்து கோழிப் பண்ணை நிறுவுவதற்கான இசைவாணை (CTE) மற்றும் கோழிப் பண்ணை செயல்படுவதற்கான இசைவாணை (CTO) பெற வேண்டும். கோழிப்பண்ணைகள் 'பச்சை வகை' யின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, மேற்குறிப்பிட்டதை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கோழிப்பண்ணைகளும் ஜனவரி 2022–ல் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டுள்ள 'கோழிப் பண்ணைகளுக்கான சுற்றுச்சூழல் வழிகாட்டுதல்களை' கடைபிடிக்க வேண்டும் எனவும், மற்றும் மேலே குறிப்பிட்ட கால வரையின்படி கோழிப்பண்ணைகளை நிறுவுவதற்கான இசைவாணை (CTE) மற்றும் செயல்படுவதற்கான இசைவாணை (CTO) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடமிருந்து பெற வேண்டும் என இதன்மூலம் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். வாரிய இணையதளம் www.tnpcb.gov.in வாயிலாகவும் விபரங்கள் தெரிந்து கொள்ளலாம்.

/10/6/2022

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

No. 76, MOUNT SALAI, GUINDY, CHENNAI - 600 032.
Tel : 044-22353134 - 139 Fax : 044-22353068
Email : tnpcb-chn@gov.in Web : tnpcb.gov.in